## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 19.04.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஆலி இம்ரானின் 103வது வசனத்தை ஓதினார்கள்:**

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوا اللّٰهَ حَقَّ تُقٰتِهٖ وَلَا تَمُوْتُنَّ اِلَّا وَاَنْتُمْ مُّسْلِمُوْنَ۝

*பொருள்: நம்பிக்கை கொண்டவர்களே! இறையச்சத்தை அதன் எல்லா நிபந்தனைகளுடன் ஏற்றுக் கொள்க. நீங்கள் முழுமையாகக் கட்டுப்பட்டு நடப்பவர்களாக இருக்கின்ற நிலையில் மட்டுமே, உங்களுக்கு மரணம் வரவேண்டும். (3:103)*

இந்த வசனத்தில், ஓர் உண்மையான மூஃமினுடைய நிலைமை கூறப்பட்டுள்ளது. ஓர் உண்மையான மூஃமின் தக்வாவின் எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றுபவராக இருக்க வேண்டும். தக்வாவிற்குரிய உரிமை அல்லது அதன் எல்லா நிபந்தனைகள் என்பது என்ன? அதற்குரிய விளக்கம் நமக்கு திருக்குர்ஆனிலிருந்து கிடைக்கின்றது. அதன் சுருக்கம் இறைவனுக்குரிய எல்லா உரிமைகளையும் அவனது அடியார்களுக்குரிய எல்லா உரிமைகளையும் கருத்தில் கொள்வது, எல்லா விதமான நன்மைகளையும் செய்வதற்கு தயாராக இருப்பது, அல்லாஹ்வின் கட்டளைகளை வாழ்வின் இறுதி நொடிகள் வரை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்வது, அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறியுள்ள விசயங்கள், கட்டளைகள், அவர்கள் செய்திருக்கின்ற முன்னறிவிப்புகள் ஆகியவற்றின் மீது நம்பிக்கை கொள்வது, அவற்றின் மீது முழுமையாக உறுதி கொள்வது, அவற்றின்படி செயல்பட முயற்சி செய்வது ஆகியவையாகும். முஸ்லிமின் பெயரை வைத்திருப்பதாலோ அல்லது தன்னைத்தானே முஸ்லிம் என்று கூறுவதாலோ மட்டும் ஒருவர் நம்பிக்கை கொண்டவரைச் சேர்ந்தவராக ஆகி விட முடியாது. மாறாக, தொடர்ச்சியாக செய்து வரும் செயல் இருக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளையின்படியும் அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களின் முன்மாதிரிக்கேற்பவும் தொடர்ந்து செயல்பட வேண்டும். அவைதான் ஒருவரை தக்வாவின் நிபந்தனைகளை நிறைவேற்றுபவராக ஆக்கும். இவ்வாறு செயல்படுபவரே உண்மையான முஸ்லிம் ஆவார்.

அல்லாஹ் கூறுகின்றான்: இதற்கு முன்னுள்ள மதங்களைப் பின்பற்றியவர்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதிலிருந்தும் விலகி விட்டார். ஏனென்றால், அவர்கள் இந்த விசயங்களைக் கருத்தில் கொள்ளவில்லை. நீங்களும் தக்வாவை கருத்தில் கொள்ளாமல் இருந்தால், அல்லாஹ்வின் கட்டளைகளின் பக்கம் கவனம் செலுத்தாமல் இருந்தால், தனது கடமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் சிந்திக்காமல் இருந்தால், பிறகு நீங்களும் இறைவனின் தண்டனைக்கு ஆளானவர்களைச் சேர்ந்தவர்களாக ஆகிவிடுவீர்கள். பிறகு உங்களது மரணமும் நல்ல செயலைச் செய்யாதவர்களின் மரணம் போன்று ஆகி விடும். முஸ்லிமாக இருப்பது முழுமையான கட்டுப்படுதலை எதிர்பார்க்கின்றது. ஒரு முஸ்லிம் இந்த விசயங்களை தன் பார்வையில் வைத்திருக்க வேண்டும். ஓர் உண்மையான மூஃமினுக்கு இறைவன் மீதுள்ள அச்சம் எப்போதும் இருக்க வேண்டும். இறைவனுக்கு கட்டுப்படுபவராக ஆக்குகின்ற உண்மையான முஸ்லிமாக அவரை ஆக்குகின்ற அந்த விசயங்களை அவர் தேட வேண்டும். இதற்காக உலக இழப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டியது வந்தாலும் ஓர் உண்மையான முஸ்லிம் அதற்காக சற்றும் கவலையடையக் கூடாது.

தாய், தந்தை, அன்பான உறவினர்கள், சமுதாயம், தலைவர்கள், அரசியல் தலைவர்கள், மார்க்கத் தலைவர்கள் ஆகிய எவருமே ஓர் உண்மையான முஸ்லிமை அல்லாஹ்வின் கட்டளைகளைப் புரிவதிலிருந்தும், அதற்கேற்ப செயல்படுவதிலிருந்தும் விலக்கி வைக்கக் கூடியவர்களாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு நபரும் இறைவன் முன்னால் ஆஜராகி தன்னுடைய கணக்கை தானே கொடுக்க வேண்டியது வரும். எந்தவொரு அரசியல் தலைவரும், எந்தவொரு நெருக்கமானவரும், எந்தவொரு மல்லவியும் எவரையும் காப்பாற்றுபவராக இருக்கமாட்டார். எந்தவொரு பீரும் எவரது சுமையையும் சுமக்க முடியாது. எனவே, அல்லாஹ்வின் கட்டளைகளைப் புரிவது, அவனது அடையாளங்களைப் பார்த்து சிந்தனை செய்வது, அவனது தூதர் கூறியுள்ள

தக்வாவின் வழிமுறைகளுக்கேற்ப செயல்படுவது, அநீதியிழைக்கின்ற விசயங்களில் கலந்து கொள்வதிலிருந்தும் தன்னைத் தவிர்த்துக் கொள்வது, இஸ்லாத்தின் உண்மையான ஆன்மாவை புரிவதற்கேற்ப செயல்படுவது ஆகியவை தான் ஓர் உண்மையான முஸ்லிமின் நிலைமையாகும். அவ்வாறு இல்லையென்றால் நம்பிக்கை கொண்டதாக வாதம் செய்வது வெறும் வாதம் மட்டுமேயாகும். அது தக்வாவிலிருந்தும் காலியாக இருக்கின்றது. அது அல்லாஹ்வின் கட்டளைகளை விட்டும் விலகியிருக்கின்றது.

அல்லாஹ் திருக்குர்ஆனின் இன்னோரிடத்தில் கூறியிருப்பது போல் அவ்வாறு தக்வா இல்லாதவர்களுடைய இறைவணக்கங்களும் ஏறறுக் கொள்ளப்படமாட்டாது; தியாகங்களும் ஏற்றுக் கொள்ளப்படாது. இன்னும் சொல்வதென்றால், வெளிப்படையாக அவர்கள் தொழுகின்ற தொழுகைகள் கூட இறைநெருக்கத்தைப் பெற்றுத் தருவதற்குப் பதிலாக அவர்களது அழிவிற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. இறைவனுக்கு கட்டுப்படுபவர்களாகவும், அவனது கட்டளைக்கேற்ப செயல்படுபவர்களாகவும், அவனது திருப்தி கிடைக்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு செயலையும் செய்யக் கூடியவர்களாகவும் யார் இருக்கின்றார்களோ அவர்களது பகைவர்களுக்குக் கூட இறைவன் பகைவனாக ஆகிவிடுகின்றான். அவர்களது நண்பர்களுக்கு இறைவன் நண்பனாகி விடுகின்றான். அவர்கள் அல்லாஹ்வின் திருப்தி கிடைக்க வேண்டும் என்பதற்காக எந்தப் பணியைச் செய்தாலும் அல்லாஹ் அதில் பரக்கத்துகளை வழங்குகின்றான். அவர்களுக்கு வெற்றிகளை வழங்குகின்றான். மரணம் வருகின்ற போது இறைவனுக்கு கட்டுப்படக்கூடிய உண்மையான முஸ்லிமாக ஆவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும் நிலையில் மரணிக்கின்ற முஸ்லிம்கள் நற்பாக்கியம் பெற்றவர்களாவர்.

அஹ்மதிகளாகிய நமக்கும் இந்த போதனை இருக்கின்றது. இந்த முயற்சியில் நாம் தொடர்ந்து ஈடுபட வேண்டும். அல்லாஹ் அருள் செய்தவாறு காலத்தின் இமாமை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை நமக்கு வழங்கியுள்ளான். பின்னவர்களில் இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக நபி தோன்றும் போது அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று, அவர் மீது நம்பிக்கை கொள்கின்ற நல்வாய்ப்பை அவன் நமக்கு வழங்கியுள்ளான். எனவே நமது நிலைமைகளை அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப வடிவமைத்துக் கொள்வதும் அதில் நிலைத்திருப்பதும் நமது மிகப்பெரிய பொறுப்பாகும். அதற்காக நாம் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும். நாம் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு அஹ்மதியும் இதை கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். ஆனால் எனது சில சொற்களில் இருந்தும் சொற்றொடர்களிலிருந்தும் முஸ்லிம் பொதுமக்களையும் இதன் பக்கம் நான் கவனமூட்ட விரும்புகின்றேன் என்பது தெரிய வரும். நான் அரசியல் தலைவர்கள் பற்றியும் மவ்லவிகளைப் பற்றியும் குறிப்பிட்டுக் கூறியதும் இந்த பொதுமக்களைக் கருத்தில் கொண்டேயாகும்.

அல்லாஹ்வின் அருளால் M.T.A. மூலமாக நமது நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடிய கேட்கக்கூடிய ஒரு பிரிவினர் இருக்கின்றனர். அவர்கள் வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தி எட்டிக் கொண்டிருக்கிறது. இவ்வகையில் அவர்கள் வரை இந்த தூதுச் செய்தியை எட்ட வைக்க நான் விரும்புகின்றேன். எவர்கள் நான் கூறுவதைப் பார்க்கின்றார்களோ, கேட்கின்றார்களோ அவர்கள் வரை இந்த செய்தி சென்று சேர வேண்டும். கடந்த சில நாட்களுக்கு முன்பு எனக்கு பாகிஸ்தானிலிருந்து ஒரு கடிதம் வந்தது. இவ்வாறான கடிதங்கள் சில நேரங்களில் எனக்கு வருவதுண்டு. ஜமாஅத்தைச் சாராத சில நண்பர்கள் ஒன்றாக அமர்ந்து M.T.A. பார்த்துக் கொண்டிருந்தனர். அல்லது அவர்கள் அஹ்மதிய்யத் தொடர்பாக படித்திருந்தனர்.

அவர்கள் எழுதுகின்றார்கள்: நீங்கள் கூறுகின்ற எல்லா கருத்துகளையும் கேட்டு விட்டு, காலத்தின் எல்லா நிலைமைகளையும் பார்த்து விட்டு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி (அலை) அவர்கள் உண்மையாளர், அஹ்மதிய்யா ஜமாஅத் உண்மையானது என்பதில் எங்களுக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. எங்களது நல்ல விருப்பங்கள் உங்களுடன் இருக்கின்றது. ஆனால் எங்களுக்கு இந்த சமுதாயத்தையும், மவ்லவிமார்களையும் எதிர்த்து நிற்பதற்கான தைரியம் இல்லை. நீங்கள் எங்களை கோழைகளாகக் கருதிக் கொள்ளுங்கள். எனவே, எங்களுக்கு அனுதாப உணர்வு இருந்தும் கூட, எங்களுக்கு விருப்பம் இருந்தும் கூட இந்த அச்சத்தின் காரணமாக எங்களால் ஜமாஅத்தில் இணைய முடியவில்லை. இவர்களில் ஒரு நபர் நமது ஜமாஅத்தைச் சாராத தனது இன்னொரு நபரிடம் இந்த ஜமாஅத் உண்மையானதாக இருந்தால், பிறகு நாம்

உண்மையாளர்களுக்கு ஆதரவாக இறைவன் எச்சரித்துள்ள இறைவனின் தண்டனைக்கும் அஞ்ச வேண்டும் என்று கூறியுள்ளார்.

எனவே இப்படிப்பட்ட மக்கள் இறையச்சத்தின் பாதையில் செல்ல கட்டளையிடப்பட்டுள்ளார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத் உண்மையானது; நிச்சயமாக உண்மையானது. அதன் உண்மைக்காக இறைவன் கடந்த 120 வருடங்களாக வெளிப்படுத்தியுள்ள செயலளவிலான சாட்சியே கண்கள் திறப்பதற்குப் போதுமானதாகும். அவ்வாறு இருக்கவும் வேண்டும். அமைப்பு ரீதியாக அரசாங்கத்தின் தரப்பிலிருந்தும் எதிர்ப்புகள் இருந்தும் கூட, இப்போதும் இருந்து வருகிறது. உண்மையை விட்டும் விலகி இருக்கின்ற ஆலிம்களின் பத்வாக்கள் மூலம் சில நாடுகளில் குறிப்பாக பாகிஸ்தானில் அஹ்மதிகள் மீது கொடுமைகள் இழைக்கப்படுகின்றது. இவ்வாறு அஹ்மதிகள் மீது கொடுமைகள் இழைக்கப்பட்ட பிறகும் கூட, அவர்களது செல்வங்களைக் கொள்ளையடித்த பிறகும் கூட அவர்களைக் கடத்துவது, கொலை செய்வது ஆகியவை நடந்தும் கூட அவர்களது வீடுகளை எரித்த பிறகும் கூட, அவர்களது வேலைகளிலிருந்து அவர்களை நீக்கிய பிறகும் கூட, அவர்களது பிள்ளைகளை பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் துன்புறுத்திய பிறகும் கூட அவர்களை படிப்பதிலிருந்து தடை செய்த பிறகும் கூட அஹ்மதிகள் தங்களது ஈமானில் நிலைத்திருப்பதுடன் மட்டுமல்லாமல் முன்னரை விட அதிகமாக தியாகங்களைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். இவை அஹ்மதிய்யத்தின் உண்மைக்கும் அவர்களது ஈமானுக்கும் போதுமான சாட்சியாக இருக்க வேண்டும். எல்லா தடைகளும் இருந்தும் கூட ஜமாஅத் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. உலக அளவில் மிகவும் பலவீனமாக இருக்கக்கூடிய ஒரு ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்குக் காரணம் சிறந்த எஜமானனாகவும் சிறந்த உதவியாளனாகவும் இருக்கின்ற இறைவன் நம்முடன் இருக்கின்றான் என்பதேயாகும். இதனையே நம்பிக்கையாளர்களின் அடையாளமாக இறைவன் கூறுகின்றான். அதாவது இறைவனது ஆதரவும் உதவியும் எல்லா நிலையிலும் அவர்களுடன் இருக்கும். இப்போது நீதியின் பார்வையுடன் பார்ப்பதாக இருந்தால் இஸ்லாத்திற்கு தொண்டாற்றுகின்றோம் என்ற பெயரில் எந்த அமைப்புகள் உருவாகி இருந்தாலும், அவை தன் தரப்பிலிருந்தும் ஜிஹாது நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் அவற்றின் விளைவுகள் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்துவதைத் தவிர வேறொன்றுமில்லை. எனது வழியில் ஜிஹாதிற்காகப் புறப்படுகின்றவர்களை நான் வெற்றி பெறச் செய்கின்றேன். அவர்களுக்கு வெற்றிகளை நான் வழங்குகின்றேன் என்று இறைவன் கூறுகின்றான்.

ஆனால் இவர்கள் என்ன வெற்றியைப் பெற்றார்கள்? முஸ்லிம்களே முஸ்லிம்களை கொல்கின்றனர். ஆயுதங்களைப் பெரிய சக்திகளிடமிருந்து இவர்கள் பெறுகின்றனர். முஸ்லிம்களிடம் இதற்கான தொழிற்சாலைகள் இல்லை. ஆயுதங்கள் தயாரிக்கின்ற நிறுவனங்களும் இல்லை. சிரியாவிலும் என்ன நடக்கின்றது என்றால், அங்கு அரசாங்கத்திற்கு எதிராக உள்ள பிரிவினர் அல்லது பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்திருப்பவர்கள் இதற்காக ஒன்றுசேர்ந்திருப்பவர்கள் மேற்கத்திய உலகம் இந்தக் கோரிக்கையைத் தான் வைத்துள்ளனர். அதாவது நீங்கள் அரசாங்கத்தைக் கவிழ்க்க விரும்பினால் எங்களுக்கு ஆயுதங்களைத் தாருங்கள் என்றே கூறுகின்றனர். இந்த ஆயுதங்களை அரசாங்கம் பயன்படுத்தினாலும் சரி அல்லது அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் பயன்படுத்தினாலும் சரி இவை யாருக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றது? முஸ்லிம்களுக்கு எதிராகவே இவை பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்திடமும் தக்வா இல்லை. அதை எதிர்க்கும் மற்ற பிரிவினரிடமும் தக்வா இல்லை. அல்லாஹ்வின் கட்டளைக்கு கட்டுப்பட்டு நடப்பது என்பது இந்த பிரிவைச் சார்ந்தவர்களிடமும் இல்லை. மற்ற பிரிவிடமும் இல்லை. எனவே இரு தரப்பிலும் தக்வா இல்லாத மக்களே உள்ளனர். இவர்களே மார்க்கத்தை விட்டு விலகிச் சென்றுள்ள மக்கள் ஆவார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை மறுக்கின்ற மக்கள் ஆவார்கள்.

அமீர் தைமூர் என்ற முஸ்லிம் ஆட்சியாளர் ஒருவர் இருந்து வந்தார். அவர் மிகச் சாதாரணமான நிலையிலிருந்து உயர்ந்து உலகின் ஒரு மிகவும் பெரிய விரிவான பகுதியில் அவரது ஆட்சி நிலைபெற்றது. அவர் கூறுகின்றார்:

நான் போருக்காகப் புறப்படுகின்ற போதும் அல்லது எந்தவொரு நாட்டின் மீது தாக்குதல் நடத்தினாலும் அங்குள்ள முஸ்லிம் அரசர்கள் அங்குள்ள பொதுமக்களுக்கு உரிய உரிமைகளைச் செலுத்துகின்றார்களா? இல்லையா? என்பதை நான் பார்ப்பேன். அல்லது அவர்கள் மார்க்கத்தில் நிலைத்து இருக்கின்றார்களா?

இல்லையா? என்று பார்ப்பேன். அந்த அரசர்கள் பொதுமக்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தாமலும் மார்க்கத்தில் நிலைத்திருக்காமலும் இருந்தால், மேலும் கொடுமை இழைத்தலும், காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்வதும் அந்த நாடுகளில் பரவியிருந்தால் பிறகு நான் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை எனக்கு கீழ் கொண்டு வந்து விடுவேன். பிறகு இறைவனின் உதவியாலும் ஆதரவாலும் அங்கு இஸ்லாமிய அமைப்பை ஏற்படுத்துவேன். இதனால் தான் எனக்கு வெற்றிகள் கிடைக்கின்றன.

எவ்வாறிருப்பினும் அவர் கூறுவதைப் பார்க்கின்ற போது அவரது பல்வேறு பாலிஸிகளும் நீதியின் அடிப்படையில் அமைந்தவையாக இருந்தன. அதன் காரணமாகவே அவர் வெற்றிகளைப் பெற்றார். அந்தக் காலத்திலிருந்த அரசர்கள் சிலரிடம் அநீதியிழைக்கும் தன்மை இருந்ததும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்தக் காலத்திலிருந்த அரசர்களிலேயே எல்லாரையும் விட சிறந்தவராக இவர் இருந்துள்ளார் என்று தோன்றுகிறது. அல்லாஹ்வும் அவருக்கு உதவி புரிந்து வந்தான். ஒரு அடிப்படையான கருத்தை அவர் கூறியுள்ளார். அதாவது ஆட்சி புரிவதற்கு நீதி, ஞானம், அறிவு, ஏழைகளை கருத்தில் கொள்வது, பொதுமக்களைக் கருத்தில் கொள்வது, அரசாங்கப் பணியாளர்களைக் கருத்தில் கொள்வது, எந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்தி தனக்கு கீழ் கொண்டு வருகின்றோமோ அங்குள்ள பொதுமக்களைக் கருத்தில் கொள்வது, அநீதியிழைக்காமல் இருப்பது ஆகியவை அவசியமாகும்.

அவர் கூறுகின்றார்: ஏதாவதொரு பொருளுக்கு பத்து பகுதிகள் நிர்ணயித்தால் எனது வெற்றிக்கான ஒன்பது பகுதிகள் நான் குறிப்பிட்ட இந்த விசயங்கள் இருப்பதன் மூலம்தான் கிடைக்கின்றது. ஏனைய ஒரு பகுதிதான் வாள் மூலம் நடக்கின்ற வேலையாகும். இப்போது நாம் ஒவ்வொரு இஸ்லாமிய நாட்டைப் பார்க்கும் போதும் அவர்களிடம் அவர்களது சுய பயன்கள் மட்டும் இருப்பது தெரிய வருகிறது. எவருக்கும் குடிமக்கள் மற்றும் பொதுமக்கள் தொடர்பாக எந்தக் கவலையும் இல்லை. தங்களது சிம்மாசனம் மற்றும் தங்களது அரசாங்கம் பற்றிய கவலை மட்டுமே அவர்களுக்கு இருக்கின்றது. ஆலிம்கள் உள்ளனர் என்றால் அவர்கள் தங்களது பணியை விட்டு விட்டு முஸ்லிம்களுக்கு மார்க்கப் பயிற்சி வழங்குவதற்குப் பதிலாக அதிகாரத்தைப் பிடிப்பதற்கு முயற்சி செய்து வருகின்றனர். அல்லது இஸ்லாத்தின் பெயரில் தீவிரவாத அமைப்புகளை நடத்திச் செல்கின்ற சிலரும் அவர்களில் இருக்கின்றனர். அல்லது அத்தகைய அமைப்புகளுக்கு அவர்கள் உதவி செய்கின்றனர். மார்க்கத்தைப் போதிக்கும் மதரஸாக்களில் ஜிஹாது என்ற பெயரில் பிள்ளைகளுக்குப் போருக்கான பயற்சி தரப்படுகிறது. ஆயுதங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகவும், தீவிரவாத செயல்களுக்குப் பயன்படுத்தப்படும் குண்டுகளை உருவாக்குவதற்கான வழிமுறைகளும் கற்றுத் தரப்படுகின்றன. பிறகு இவையெல்லாம் யாருக்கு எதிராகப் பயன்படுத்தப்படும்? முஸ்லிம்களுக்கு எதிராகத்தான் பயன்படுத்தப்படும். முஸ்லிம்கள் முஸ்லிம்களின் இரத்தத்திற்கு தாகமுடையவர்களாக உள்ளனர். இஸ்லாம் அமைதி மற்றும் அன்பின் மார்க்கமாகும். அதன் பொருளே அமைதி, பாதுகாப்பு, துன்பங்கள் மற்றும் துயரங்களிலிருந்து வெளியேற்றக்கூடியது என்பதாகும். இன்று இந்த மார்க்கத்திற்கு இந்த மக்கள் எந்த அளவு அவப்பெயரை ஏற்படுத்தி விட்டனர் என்றால் உலகில் எங்கு ஒரு தீவிரவாத சம்பவம் நடந்தாலும் அதில் தொடர்புள்ளதாகக் கூறி முதலில் முஸ்லிம் அமைப்புகளின் பெயரே கூறப்படுகின்றது. பெரும்பாலான முஸ்லிம் அமைப்புகள் அதை ஏற்றுக் கொள்கின்றன. அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும் அவர்கள் மீது தான் சந்தேகம் கொள்ளப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் அமெரிக்காவில் இதுபோன்ற சம்பவம் நடந்தது. அங்கு குண்டு வெடித்தது. அங்கு விளையாடிக் கொண்டிருந்தவர்கள் ஓடினர். அநீதியிழைக்கப்பட்டது. அப்போது உடனடியாக இஸ்லாத்திற்கு அவப்பெயரைத் தேடித் தருவதற்கு தயாராக இருக்கின்ற இஸ்லாத்தின் எதிரிகளாக இருக்கின்ற மக்கள் இதனை முஸ்லிம்கள் தான் செய்திருப்பார்கள் என்று கூற ஆரம்பித்தார்கள். அவர்கள் எந்தவொரு அமைப்பின் பெயரையும் கூறவில்லை. ஒட்டுமொத்தமாக முஸ்லிம்கள் இதனை செய்திருப்பதாக அவர்கள் கூறினர். இந்த முறை இந்த அமைப்புகளும் இந்த சம்பவத்துடன் எங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறி மறுத்து விட்டன. ஆனால் இந்த வாக்குமூலம் மட்டும் போதுமானதாக இருந்தது. ஆனால் தக்வா, இறைவனுக்கு கட்டுப்பட்டு நடப்பது, அவனுக்கு கீழ்படிந்து நடப்பது, அவனது கட்டளைகளைச் செயல்படுத்துவது ஆகியவை இம்மக்களிடம் இல்லாமல் இருப்பதாலும் அதை விட்டு தொலைவில் விலகி இருப்பதாலும் இவர்கள் தமது வாக்குமூலத்தில் இதையும் கூறியுள்ளார்கள். அதாவது நாங்கள் இதை செய்யவில்லைதான். ஆனால் யார் இதனை செய்திருந்தாலும் அவர் மிக நல்லதைச் செய்துள்ளார். நாங்கள் அவருக்கு உதவுகின்றோம் என்று கூறியுள்ளனர்.

உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஒன்றுகூடியிருந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் இவர்களுக்கு என்ன கிடைத்தது? அல்லது இதற்கு உதவி புரிபவர்களுக்கு இதனால் என்ன கிடைக்கப் போகின்றது? ஒருபுறம் எங்களை விட அதிகமாக வேறு யாருக்கும் ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நேசமில்லை என்பது இவர்களது வாதமாகும். மறுபுறம் பெருமானார் (ஸல்) அவர்களது முன்மாதிரி மற்றும் அன்னாரது போதனைகளுக்கு எதிராக பேசப்படுகிறது. அன்பு செலுத்தக் கூடியவர்கள் தான் அன்பு செலுத்தக் கூடியவரது ஒவ்வொரு சிறு சிறு விசயங்களுக்குக் கூட முக்கியத்துவம் தரக்கூடியவர்களாக இருப்பார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் போரில் கூட அப்பாவி குழந்தைகள், பெண்கள், முதியவர்கள், துறவிகள் ஆகியோருக்கு இழப்பை ஏற்படுத்துவதை தடை செய்தார்கள். திருக்குர்ஆனும் குறிப்பாக போருக்கான அனுமதியை வழங்கி ஒவ்வொரு மதத்தையும் பாதுகாத்துள்ளது. போர் இல்லாமலேயே பல உயிர்களையும் பறிக்கின்ற இன்றைய இந்த நிலை பற்றி என்ன சொல்வது? பல மக்களையும் அவர்கள் தமது உடல் உறுப்புகளை இழக்கும்படி செய்து விட்டனர். உயிர் தப்பிய மக்களில் சிலரது கைகளை வெட்ட வேண்டியது வந்தது. சிலரது கால்களை வெட்ட வேணடியது வந்தது. ஒரு பத்திரிகையில் கட்டுரை எழுதக்கூடிய ஒரு அமெரிக்க பத்திரிகையாளர் இதற்கு ஒரேயொரு தீர்வுதான் இருக்கின்றது. எல்லா முஸ்லிம்களையும் கொன்று விடுங்கள் என்று கூறியுள்ளார். இந்த தைரியம் முஸ்லிம் அல்லாதவர்களிடம் எப்படி உருவாகியது? இதற்கு முஸ்லிம்களே துணைபோகின்றனர். மேற்கத்திய நாடுகளில் இதுபோன்ற ஒன்றிரண்டு சம்பவங்களே நடக்கின்றது. பிறகு இப்படிப்பட்ட விசயங்களைக் கேட்க வேண்டியது வருகிறது.

இஸ்லாமிய நாடுகளில் அமைதியின்மை ஏறக்குறைய 70% இருக்கின்றது. இது அன்றாடம் நடக்கின்ற விசயமாகி விட்டது. பாகிஸ்தானில் பாருங்கள்! ஆப்கானிஸ்தானில் பாருங்கள்! எகிப்தில் பாருங்கள்! சிரியாவில் பாருங்கள்! லிபியாவில் பாருங்கள்! சோமாலியாவில் பாருங்கள்! சூடானில் பாருங்கள்! அல்ஜீரியாவை பாருங்கள்! ஒவ்வொரு இடத்திலும் முஸ்லிம்கள் முஸ்லிம்களைக் கொல்கின்றனர். கொடுமை என்னவென்றால் இதனை மதத்தின் பெயரால் இவர்கள் செய்கின்றனர். கொடுமை இழைக்கத்தான் வேண்டுமென்றால் குறைந்தபட்சம் மதத்தின் பெயரால் அதை செய்யாதீர்கள். இந்த கொலைக்கும், கொடுமையிழைத்தலுக்கும் ஜிஹாது என்ற பெயரை சூட்டாதீர்கள். எந்த இஸ்லாமிய நாடுகளில் வெளிப்படையாக தீவிரவாதம் இல்லையோ அங்குள்ள பொதுமக்களுக்கு உரிய உரிமைகள் செலுத்தப்படவில்லை. நீதி அங்கு இல்லை. ஏழை மேலும் ஏழையாகிக் கொண்டே இருக்கின்றார். செல்வந்தர் மேலும் செல்வந்தராகிக் கொண்டே இருக்கின்றார்.

இப்போது சவூதி அரேபியா எண்ணெய் வளத்தால் நிரம்பியுள்ள செல்வம் நிறைந்த நாடாகும். அது பணக்கார நாடு என்று கூறப்படுகின்றது. அங்கும் ஏழை மக்கள் இருக்கின்றனர். பல விதவைகளும், அனாதைக் குழந்தைகளும் இரண்டு நேரம் சாப்பிடுவதற்கு ரொட்டி கிடைக்குமா என்று ஏங்குகின்றனர். அங்கு இஸ்லாத்தின் பெயரைக் கூறி பெண்கள் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு தடை விதித்துள்ளனர். அந்த பெண்களின் தேவையை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் தேவைகளை கவனத்தில் கொள்ளாமல் இருக்கின்றார்கள். அவர்கள் ரேசன் வழங்குவதற்கான ஏற்பாட்டை செய்திருந்தாலும் கூட அது எந்த அளவு குறைவானதாக இருக்கின்றது என்றால் அதனால் வயிறு நிரம்பாது. அரசர்கள் தங்களது அரண்மனைகளின் சுவர்களில் கூட தங்க முலாம் பூசியுள்ளனர். எண்ணெய் செல்வத்தின் மூலம் வரம்புமீறி பயனடைந்து வருகின்றனர். குடிமக்கள் பசியால் மரணிக்கின்றனர். சில நாட்களுக்கு முன் டி.வி.யில் ஒரு டாக்குமெண்டரி காட்டப்பட்டது. அதில் இந்த உண்மைகள் கூறப்பட்டன. எப்படிப்பட்ட நிலைமையில் மக்கள் அங்கு இருக்கின்றார்கள் என்பது காட்டப்பட்டது. இவ்வாறே ஏனைய இஸ்லாமிய நாடுகளின் நிலைமையும் இருக்கின்றது. அமைதியின்மை, அநீதி, கொடுமை இழைப்பது, அரசாங்கம் குடிமக்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளைச் செலுத்தாமல் இருப்பது, அவ்வாறே பொதுமக்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய உரிமையைச் செலுத்தாமல் இருப்பது ஆகியவை உள்ளன. சந்தர்ப்பம் கிடைக்கும் போது பொதுமக்கள் தரப்பிலிருந்து அநீதியிழைப்பது வெளிப்படுகின்றது. இவையெல்லாம் தக்வாவை விட்டும் தொலைவில் கொண்டு செல்லும் விசயங்களாகும். மேலும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதிலிருந்தும் தன்னைத்தானே வெளியேற்றுவதாகும். இஸ்லாத்தின் போதனைகள் சிறப்பானதும் முழுமையானதும் ஆகும் என்று கூறுகின்றார்கள். நிச்சயமாக அதன் போதனைகள் அப்படித்தான் இருக்கின்றன. ஆனால், எங்களுக்கு எந்த சீர்திருத்தவாதியின் தேவையும் இல்லை. மஸீஹ் மற்றும் மஹ்தியின் தேவை இல்லை. எந்த நபியின் தேவையும் இல்லை என்று அவர்கள் கூறுவது தவறாகும். இறைவனும் அவனது தூதர் ரஸுலே

கரீம் (ஸல்) அவர்களும் இக்காலத்திலுள்ள மக்களை சீர்திருத்துவதற்கு ஒரு நபர் தோன்றுவார் என்று முன்னறிவிப்பு செய்திருப்பது ஒருபுறம் இருக்கட்டும். காலத்தின் நிலைமைகள் தானே அழைத்து அழைத்து நம்மிடம் கூறுவது என்னவென்றால், முஸ்லிம்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட போதனைகளை மறந்து விட்டனர். பள்ளிவாசல்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் ஆலிம்கள் அவற்றை அரசியல் கூடாரங்களாக மாற்றி விட்டனர். திருக்குர்ஆன் இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் அதுவும் அழகிய பீரோக்களில் அலங்காரப் பொருளாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஆலிம்கள் தங்களது விருப்பத்திற்கேற்ப அதற்கு விளக்கவுரை கூறி முஸ்லிம் பொதுமக்களை தவறான வழியில் நடத்துகின்றார்கள். எனவே எவரது தேவையுமில்லை என்று கூறுவது முற்றிலும் தவறாகும். இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவரது தேவை இருக்கின்றது. தேவை இருக்கும் என்ற இந்த முன்னறிவிப்பை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்துள்ளார்கள். இந்த ஆலிம்கள் எவ்வகையிலும் இதை மறுக்க முடியாது. அவ்வாறு இவர்கள் மறுக்கின்றனர் என்றால் இவர்கள் பொய் கூறுகின்றனர். தவறான கருத்துக்களைக் கூறுகின்றனர். பொதுமக்கள் இவற்றை சிந்திக்க வேண்டும்.

இந்த தேவை இருக்கின்றது. நிச்சயமாக இருக்கின்றது. ஒரு நபர் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட வேண்டும். அவர் முஸ்லிம்களின் இந்த சீர்குலைவை சீர்திருத்த வேண்டும். மேலும் முஸ்லிம் அல்லாதவர்களின் உலகில் இஸ்லாம் பற்றிய தவறான எண்ணங்களை அழித்து இஸ்லாத்தின் அழகிய போதனைகளை அவர் உலகில் நிலைநிறுத் வேண்டும். உலகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது கொடியின்கீழ் கொண்டு வர வேண்டும். பொதுமக்களை இந்த ஆலிம்கள் நபி தொடர்பான விவாதத்தைக் கூறி குழப்பத்தை ஏற்படுத்தி தங்களது நோக்கத்தை நிறைவேற்ற முயற்சி செய்ய ஆரம்பித்துள்ளனர். இறைவனது தூதர் (ஸல்) அவர்களும் வர வேண்டிய வாக்களிக்கப்பட்ட மஸீஹையும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியையும் நபி என்ற பெயரால் அழைத்திருக்கும் போது அதற்கு மாற்றமான விளக்கத்தைக் கூறி அவருக்கும் அவரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் எதிராக கொடுமை இழைப்பதற்கான வழிகளைத் திறப்பதற்கு எவருக்கு உரிமை இருக்கிறது? நான் ஏற்கனவே கூறியது போன்றே உலகின் நிலைமைகள் தாமே இந்த விசயத்திற்கு சாட்சி பகர்கின்றன. திருக்குர்ஆன் அதன் அசல் வடிவில் இருந்தும் கூட முஸ்லிம்களின் மார்க்க, ஆன்மீக, நல்லொழுக்க தரம் வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. தக்வா காணப்படவில்லை. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதிலிருந்தும் அதற்கு கீழ்படிவதிலிருந்தும் முஸ்லிம்களின் பெரும்பான்மையினர் வெளியேறிச் சென்று விட்டனர். இப்படிப்பட்ட நிலைமைகளில் சீர்திருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதாவதொரு வழிமுறை இருக்க வேண்டும் என்பது சிந்திக்கத்தக்கதாகும். இஸ்லாத்தின் போதனைகளின் ஆன்மாவைப் புரிந்து அதை முஸ்லிம்கள் மத்தியில் செயல்படுத்தக்கூடிய ஒரு நபரின் தேவை இருக்கின்றது. அஹ்மதிகளாகிய நாம் அல்லாஹ்வின் அருளால் நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றோம். தனது வாக்குறுதிக்கேற்பவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பிற்கேற்பவும் அந்த நபரை அல்லாஹ் 14வது நூற்றாண்டில் அனுப்பினால் என்று நாம் கூறுகின்றோம். அவர் அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கேற்ப திருக்குர்ஆனின் அறிவையும் ஞானத்தையும் மிகவும் விளக்கமாக தமது நூல்களில் எடுத்துக்கூறி உண்மை மற்றும் பொய் ஆகியவற்றிற்கிடையில் உள்ள வித்தியாசத்தை வெளிப்படுத்திக் காட்டி உலகிலுள்ள எல்லா மார்க்கங்கள் மீதும் இஸ்லாத்திற்குள்ள சிறப்பை நிரூபித்துக் காட்டி எதிரிகளுக்கு திறந்த சவால்களை விடுத்து தன்னுடன் இருந்து வருகின்ற இறை உதவிகளின் முத்திரையைப் பதித்து எதிரிகளின் வாயை அடைத்து ஒரு நீண்ட காலம் வரை வாழ்ந்து அவர் இறைவனிடம் திரும்ப சென்று விட்டார். தனக்குப் பின்னால் கியாமத் நாள் வரை இறை உதவிகளுடன் நீடித்து நிற்கின்ற ஒரு இயக்கத்தை விட்டுச் சென்றுள்ளார். அது அல்லாஹ்வின் அருளால் முன்னேற்றத்தின் வழிகளில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றது. அல்லாஹ்வின் புறமிருந்து விண்ணிலிருந்தும் மண்ணிலிருந்தும் வெளிப்பட்ட உதவிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தில் பல்வேறு இயற்கைச் சீற்றங்களின் வடிவிலும் வெளிப்பட்டன. அதன் தொடர் இன்றும் நீடித்துக் கொண்டிருக்கின்றது.

பாகிஸ்தான்வாசிகளுக்கும் முஸ்லிம் பொதுமக்களுக்கும் இந்த பூகம்பங்கள், இந்த இயற்கைச் சீற்றங்கள், இந்த வெள்ளப்பெருக்கு, உலகில் முஸ்லிம்களுக்கு இருந்து வரும் தகுதியற்ற நிலை ஆகியவை இவர்களது கண்களைத் திறப்பதற்கு போதுமானதாக இல்லையா? கடந்த சில நாட்களுக்கு முன்னால் வந்த பூகம்பம் ஒரு நாட்டில் மட்டும் வரவில்லை. பாகிஸ்தானிலும் இழப்பு ஏற்பட்டது. ஈரானிலும் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானிலும் ஏற்பட்டது. மத்திய கிழக்கு நாடுகளிலும் ஏற்பட்டது. இந்தோனேஷியா வரை அது சென்று

விட்டது. அல்லாஹ்வின் இந்த விதி செயல்படுவதை முஸ்லிம்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. தவ்பா செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. இஸ்திஃபாரின் தேவை இருக்கின்றது. பெயர் தாங்கி ஆலிம்களுக்கு அஞ்சுவதற்குப் பதிலாக கண்ணாடியில் அவர்களது தோற்றத்தை அவர்களுக்கு காட்ட வேண்டிய தேவை இருக்கின்றது. இஸ்லாத்தின் போதனைகளுக்கு மாற்றமான கருத்துக்களை ஏன் எங்களுக்கு கூறுகின்றீர்கள்? இவர்கள் கூறுகின்ற போதனையைப் போன்ற ஒரு விசயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையிலிருந்து ஒரு சம்பவத்தை எடுத்துக்காட்டிக் கூறட்டும். இன்றைய ஆலிம்கள் கூறுகின்ற போதனைகள் போன்று பெருமானார் (ஸல்) அவர்களும் போதித்தார்கள் என்பதை எடுத்துக் காட்டட்டும். எனவே, ஆலிம்கள் நமக்கு கூறுகின்ற இந்த இஸ்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள அந்த இஸ்லாம் அல்ல. பெருமானார் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இஸ்லாத்தின் விளக்கம் அன்பு, நேசம், அமைதி, சாந்தி, துன்பங்களை அகற்றுவது ஆகியவையாகும். இஸ்லாத்தின் பெயரில் தனது சுய பயன்களை அடைவதற்காக இந்த துன்பங்களை மேலும் அதிகரிக்கும்படி செய்கின்ற இஸ்லாம் அல்ல அது. தக்வாவைத் தேடி அதற்கேற்ப செயல்பட முயற்சி செய்வது ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும். தனது மரணத்தை கண் முன்னால் நிறுத்த வேண்டும். எந்த நேரமும் அது வரலாம். எனது வாழ்நாள் இவ்வளவு என்று யாரும் கூற முடியாது. இறைவனுக்குரிய உரிமைகளையும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்தும் வகையிலுள்ள செயல்களைச் செய்ய வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்துக் கூறுவேன். அதன் மூலம் அவர்களது முக்கியத்துவமும் முஸ்லிம்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் தெளிவாகி விடுகின்றது. அவ்வாறு ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை உண்மையான உள்ளத்துடன் ஏற்றுக் கொண்டவர்கள்தான் முன்னேற்றத்தைப் பெறுவார்கள் என்பது இறைவனின் விதியாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஸ்லிம்களின் உள்ளத்தில் இறைவனுக்குப் பதிலாக உலகத்தின் சிலைக்கு மகத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அதன் மீதே அவர்கள் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் வைத்துள்ளனர். வழக்கு மற்றும் சமாதானம் என்று அனைத்துமே உலகிற்காகவே இருக்கின்றது. இந்த சிலையை துண்டு துண்டாக்கி விட்டு அல்லாஹ்வின் மகத்துவமும் கம்பீரமும் அவர்களது உள்ளத்தில் நிலைபெற்று விட வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். மேலும் ஈமானின் மரம் புத்தம்புது கனிகளை வழங்க வேண்டும். இப்போது அந்த மரத்தின் வடிவம் மட்டுமே இருக்கின்றது. அது அசல் மரமல்ல. ஏனென்றால் அசல் மரம் தொடர்பாக,

أَلَمْ تَرَ كَيْفَ ضَرَبَ اللَّهُ مَثَلًا كَلِمَةً طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ أَصْلُهَا ثَابِتٌ
وَفَرْعُهَا فِي السَّمَاءِ ۝ تُؤْتِي أُكُلَهَا كُلَّ حِينٍ بِإِذْنِ رَبِّهَا

***முழுமை பெற்ற மார்க்கம் பற்றிய உதாரணத்தை அல்லாஹ் எவ்வாறு விளக்கியுள்ளான் என்பதை நீர் காணவில்லையா? அது தூய்மையான ஒரு மரத்தைப் போன்றது. அதன் வேர் உறுதியாக உள்ளது. அதன் கிளை வானத்தை எட்டியுள்ளது. ஒவ்வொரு சமயத்திலும் அது தனது இறைவனின் அனுமதியுடன் தனது பழத்தை வழங்குகின்றது. (14:25-26)***

أَصْلُهَا ثَابِتٌ என்பதன் பொருள் ஈமானின் வேர்கள் உறுதியாகவும் நிலைபெற்றும் இருக்கும். அது முழுமையான நிச்சய உறுதியை அடைந்திருக்கும். அது எல்லா நேரமும் தனது பழங்களை தந்து கொண்டிருக்கும். எந்த சமயத்திலும் அது காய்ந்து போன மரம் போல் ஆகாது. ஆனால் கூறுங்கள். இப்போது அந்த நிலைமை இருக்கின்றதா? இப்போது இதற்கான என்ன தேவை இருக்கின்றது என்று பலரும் கூறுகின்றனர். அந்த நோயாளியின் எத்தகு அறிவீனமாக இது உள்ளது! அவர் மருத்துவரின் தேவை என்ன என்றே கேட்கின்றனர். அவர் மருத்துவரிடமிருந்தும் தன்னிறைவு பெற்றவராக ஆகி அவரது தேவை இல்லை என்று கருதினால் அதன் விளைவு அவரது அழிவைத் தவிர வேறென்ன இருக்க முடியும்? இப்போது முஸ்லிம்கள், *நாங்கள் முஸ்லிம்களாக இருக்கின்றோம்* என்ற தரத்தில் நுழைந்து விட்டனர். ஆனால் *நாங்கள் ஈமான் கொண்டுள்ளோம்* என்ற தரத்தில் அவர்கள் இல்லை. ஒரு ஒளி அவர்களோடு இருக்கும்போதுதான் இந்த தரத்தை அவர்கள் அடைவார்கள். சுருக்கமாக, இந்த விசயங்களுக்காகத்தான் நான் அனுப்பப்பட்டுள்ளேன். எனவே எனது விவகாரத்தில் என்னைப் பொய்ப்படுத்துவதில் அவசரம் காட்டாதீர்கள். மாறாக இறைவனுக்கு அஞ்சுங்கள். தவ்பா செய்யுங்கள். ஏனென்றால் தவ்பா செய்பவர்களின் அறிவு கூர்மையாகிறது.

பிறகு அவர்கள் பிளேக் நோய் பற்றிய உதாரணத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள். பிளேக் நோய் தொடர்பான அடையாளம் மிகவும் அபாயகரமான அடையாளமாகும். அவர்கள் கூறகின்றார்கள்:

அல்லாஹ் இது தொடர்பாக எனக்கு இறக்கியுள்ள வசனம் இதுவாகும்.

إِنَّ اللّٰهَ لَا يُغَيِّرُ مَا بِقَوْمٍ حَتّٰى يُغَيِّرُوْا مَا بِأَنْفُسِهِمْ

இது இறைவனின் வசனமாகும். மேலும் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுபவர் மீது சாபம் உண்டாகட்டும்.

இறைவன் கூறுகின்றான்: உள்ளங்களில் மாற்றம் ஏற்படும் அந்த சமயத்தில் தான் எனது நாட்டங்களில் மாற்றம் ஏற்படும். இறைவனுக்கு அஞ்சுங்கள். அவனது தண்டனைக்கு அஞ்சுங்கள். எவரும் யாருக்கும் பொறுப்பாளி ஆக முடியாது. சாதாரண வழக்கு விசயத்தில் கூட பெரும்பாலான மக்களால் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ள முடியவில்லை. பிறகு அந்த நாள் தொடர்பாக நீங்கள் என்ன நம்பிக்கை வைத்துள்ளீர்கள்?

அது தொடர்பாக, يَوْمَ يَفِرُّ الْمَرْءُ مِنْ أَخِيْهِ ۝ என்று கூறப்பட்டுள்ளது. அதாவது கியாமத் நாளில் ஒரு சகோதரன் தனது இன்னொரு சகோதரனை விட்டும் விலகி ஓடி விடுவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பாருங்கள்! எவ்வாறு ஒரு நபர் அல்லாஹ்வையும் அவனது தூதரையும், அவனது வேதத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளதாக வாதம் செய்து விட்டு அவனது விரிவான கட்டளைகளை உதாரணமாக தொழுகை, நோன்பு, ஹஜ், ஸக்காத் ஆகிய கடமைகளைச் செய்யாமலும் தக்வாவையும் தூய்மையையும் பேணாமலும் இருந்தால், மேலும் நஃப்ஸை தூய்மைப்படுத்தி தீமைகளைக் கைவிட்டு நன்மைகளைப் பெறுவதற்காக இடப்பட்ட கட்டளைகளை கைவிட்டு விட்டால் அவர் தன்னை முஸ்லிம் என்று கூறுவதற்கு தகுதியுடையவர் அல்ல. ஈமானின் நகைகளால் அலங்கரிக்கப்படுதல் என்பது அவருக்கு பொருந்தாது. இவ்வாறே எந்த நபர் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொள்ளவில்லையோ மேலும் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் இல்லை என்று கருதுகின்றாரோ அவரும் இஸ்லாத்தின் உண்மை நிலை, நபித்துவத்தின் நோக்கம், மற்றும் தூதுத்துவத்தின் நோக்கம் ஆகியவற்றைப் பற்றி அறியாதவராக இருக்கின்றார்.

அப்படிப்பட்டவர் உண்மையான முஸ்லிம் என்றும் இறைவன் மற்றும் அவனது தூதரை உண்மையான முறையில் பின்பற்றுபவர் என்றும் இறைவன் மற்றும் அவனது தூதருக்கு உண்மையான முறையில் கட்டுப்படுபவர் என்றும் கூறுவதற்கு உரிமை அற்றவராக ஆகி விடுகின்றார். எவ்வாறு அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக திருக்குர்ஆனின் கட்டளைகளைத் தந்துள்ளானோ அவ்வாறே இறுதிக் காலத்தில் ஒரு இறுதி கலீஃபாவின் வருகை பற்றிய முன்னறிவிப்பை மிகவும் வலுவாக எடுத்துக் கூறியுள்ளான். அவரை ஏற்றுக் கொள்ளாதவர் மற்றும் அவரை விட்டும் முகம் திருப்பிச் செல்பவர்கள் ஆகியோருக்கு கட்டுப்படாதவர்கள் என்று அவர் பெயர் வைத்துள்ளான். திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் இடம்பெற்றுள்ள சொற்களில் காணப்படும் வித்தியாசம், வித்தியாசமல்ல. மாறாக வேறு சொற்களில் திருக்குர்ஆனில் கூறப்பட்டதற்கான விளக்கம் ஹதீஸில் வந்துள்ளது. திருக்குர்ஆனில் கலீஃபா என்ற சொல் கூறப்பட்டுள்ளது. நபிமொழிகளில் இந்த இறுதி கலீஃபா தொடர்பாக அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார் என்று அதற்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் எந்த நபரை அனுப்புவதைப் பற்றி வாக்குறுதி என்ற சொல்லைக் கூறியுள்ளதோ மேலும் அதன் மூலம் அந்த நபரை அனுப்புவதை ஒரு மகத்தான செய்தியாக குறிப்பிடுகின்றதோ அந்த நபர் தொடர்பாக அவரை ஏற்றுக் கொள்ள வேண்டிய என்ன தேவை இருக்கின்றது என்று கூறுபவர் எத்தகைய முஸ்லிமாக இருக்க முடியும்?

**பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்:**

அறிவற்ற சமுதாயமே! நீங்கள் யாருக்கு ஒப்பாக இருக்கின்றீர்கள்? நீங்கள் அந்த பேரிழந்தவர்களுக்கு ஒப்பாக இருக்கின்றீர்கள். அவர்களது வீட்டின் அருகில் ஒரு வள்ளல் ஒரு தோட்டத்தை உருவாக்கினார். அதில் அவர் எல்லா வகையைச் சேர்ந்த பழம் தரக்கூடிய மரங்களையும் நட்டினார். அதற்குள் இனிமையான சுவையுள்ள தண்ணீரைக் கொணட ஒரு ஆறையும் ஓடும்படி செய்தார். அந்த ஆற்றின் தண்ணீர் மிகவும் இனிப்பானதாக இருந்தது. அப்போது அந்த வள்ளல் அந்த சமுதாயத்தை விருந்துக்கு அழைத்தார். அந்த சமுதாயமோ வெயிலில்

நடந்து கொண்டிருந்தது. அவர்களுக்காக அவர்கள் அமர்வதற்காக எந்த நிழலும் இருக்கவில்லை. அவர்கள் சாப்பிடுவதற்காகவும் குடிப்பதற்காகவும் எந்தப் பழமும் இருக்கவில்லை. தண்ணீரும் இருக்கவில்லை. ஆனால் அந்த பேரிழந்த சமுதாயம் விருந்திற்காக இந்த அழைப்பை ஏற்காமல் மறுத்தது. அந்த வெயிலின் கடுமையான வெப்பம், தாகம் மற்றும் பசியால் அவர்கள் மரணித்து விட்டனர்.

எனவே தான் இறைவன் கூறுகின்றான்: அவர்களுடைய இடத்தில் நான் இன்னொரு சமுதாயத்தைக் கொண்டு வருவேன். அந்த சமுதாயம் மரங்களின் குளிர்ந்த நிழலில் அமரும். இந்தப் பழங்களைச் சாப்பிடும். இந்த இனிமையான தண்ணீரை அருந்தும். இறைவன் இதற்கு உதாரணமாக திருக்குர்ஆனில் மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளான். துல்கர்னைன் ஒரு சமுதாயத்தை அது வெயிலில் காய்ந்து கொண்டிருக்கும் நிலையில் கண்டார். அவர்களுக்கும் சூரியனுக்கும் இடையில் எந்த திரையும் இருக்கவில்லை. இந்த சமுதாயம் துல்கர்னைனிடமிருந்து எந்த உதவியையும் கேட்கவில்லை. அதனால் அதே துன்பத்தில் அவர்கள் ஆழ்ந்திருந்தனர். ஆனால் துல்கர்னைனுக்கு இன்னொரு சமுதாயம் கிடைத்தது. தங்களது எதிரிகளிடமிருந்து தப்பிப்பதற்காக அது துல்கர்னைனிடம் உதவி செய்யும்படி கேட்டது. அவர்களுக்காக ஒரு சுவர் கட்டப்பட்டது. அதன் காரணமாக அவர்கள் எதிரிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பித்தனர்.

எனவே நான் உண்மையாகவே கூறுகின்றேன். திருக்குர்ஆனில் எதிர்காலத்தில் நடப்பது பற்றி கூறப்பட்டுள்ள முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப அந்த துல்கர்னைன் நான் ஆவேன். அந்த துல்கர்னைன் ஒவ்வொரு சமுதாயத்தின் நூற்றாண்டையும் சந்தித்தார். வெயிலில் எரிந்து கொண்டிருந்தவர்கள் முஸ்லிம்களில் என்னை ஏற்றுக் கொள்ளாத மக்கள் ஆவர். சேறு நிறைந்த நீரூற்றிலும் இருளிலும் அமர்ந்திருப்பவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவர். அவர்கள் சூரியனை ஏறெடுத்துக் கூட பார்க்கவில்லை. எந்த சமுதாயத்திற்காக சுவர் கட்டப்பட்டதோ அது எனது ஜமாஅத் ஆகும். நான் உண்மையாகவே கூறுகின்றேன். அவர்களது மார்க்கம் தான் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பித்து விடும். சோம்பேறித்தனத்தால் உருவான ஒவ்வொரு அடித்தளத்தையும் இணைவைத்தலும் நாத்திகமும் தின்று விடும். ஆனால் இந்த ஜமாஅத்திற்கு நீண்ட ஆயுள் இருக்கும். சய்த்தான் இவர்களை வெற்றி கொள்ள முடியாது. சய்த்தானிய பிரிவு அவர்களுக்கு எதிராக வெற்றி பெற முடியாது. அவர்கள் கூறும் ஆதாரங்கள் வாளை விட கூர்மையானதாகவும் ஈட்டியை விட வேகமாக உள்ளே நுழையக் கூடியதாகவும் இருக்கும். அவர்கள் கியாமத் வரை ஒவ்வொரு மதத்தின் மீதும் வெற்றி பெற்றுக் கொண்டே இருப்பார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என்னை அடையாளங்காண முடியாத அந்த அறிவீனர்கள் மீது பரிதாபமே! அது எத்தகு இருள் அடைந்துள்ள கண்களாக இருக்கின்றன? உண்மையின் ஒளியை அதனால் காண முடியவில்லை. நான் அவர்களுக்கு தென்படமாட்டேன். ஏனென்றால் காழ்ப்புணர்ச்சி அவர்களது கண்களை இருள் நிறைந்ததாக ஆக்கி விட்டது. உள்ளங்களில் துருப்பிடித்துள்ளது. கண்களில் திரை இருக்கின்றது. அவர்கள் உண்மையான முறையில் தேட ஆரம்பித்தால், உள்ளத்தை வெறுப்பிலிருந்தும் தூய்மையாக்கி, பகலில் நோன்புகளை வைத்து இரவில் எழுந்து துஆ செய்தவாறு அழுதால், மன்றாடினால் நான் யார் என்பதை கருணைமிக்க இறைவன் அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவான் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இறைவனது தன்னிறைவு பெற்ற தன்மைக்கு அஞ்சுங்கள். இறைவன் தன்னிறைவு பெற்றவன். அவனுக்கு அஞ்சுங்கள். மறுமை பற்றி கவலைப்படுங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மக்களே! இறைவனையும் இறைவனது அடையாளங்களையும் அற்பமாகக் கருதாதீர்கள். அந்த இறைவனிடம் பாவங்களுக்காக மன்னிப்பை வேண்டுங்கள். அவன் முன்னால் உங்களது பாவங்கள் மீதுள்ள அச்சத்தால் பணிவை மேற்கொள்ளுங்கள். இதற்கு முன்னால் பொய்ப்படுத்திய சமுதாயங்களுக்கு ஏற்பட்ட முடிவைப் பற்றி நீங்கள் மறந்து விட்டீர்களா? தண்டனையை வழங்குகின்ற இறைவனின் வேத நூலிலிருந்தும் நீங்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் அஞ்சக்கூடியவர்களாக இருந்தால் உங்களுக்கு நேரிடும் தீய அபாயங்களிலிருந்தும் இறைவனது அடைக்கலத்தின் கீழ் வந்து விடுங்கள். ஒருவர் பின் ஒருவராக எழுந்து நில்லுங்கள். பகைமை கொள்பவர்களை விட்டு விலகி விடுங்கள். பிறகு உங்களுக்கு முன்னால் நிராகரிப்பவர்களுக்கு வழங்கப்பட்ட ஆதாரங்கள் உங்களுக்கு வழங்கப்படவில்லையா? என்று சிந்தனை செய்யுங்கள். என்ன உங்களிடம் அடையாளங்கள் வரவில்லையா? நீங்கள் இறைவனை அவமதித்ததன்

காரணமாக இழிவடையவில்லையா? என்ன உங்களது இந்த எல்லா கடன்களும் கடனை வாங்கியவர் செலுத்துவது போன்று திரும்பச் செலுத்தவில்லையா? இந்த அரண்மனையில் என்னை நுழையச் செய்த அந்த உண்மையான அருள்களை வழங்குபவன் மீது ஆணையாக! அவன் எனது உண்மையை உறுதி செய்தான். எனக்கு சந்ததிகளை வழங்கினான். எனக்காக எதிரிகளை அழித்தான். தனது அடையாளங்களில் சீராக்குவது, சீர்குலைப்பது ஆகிய அற்புதத்தைக் காட்டினான். சர்வ சமய மாநாட்டில் ஒன்றை உருவாக்குகின்ற அடையாளத்தைக் காட்டினான்.

அவர்கள் செய்த முன்னறிவிப்பிற்கேற்ப இந்த மாநாட்டில் அவர்களது நூல் வாசிக்கப்பட்டது. சொல் ரீதியான செயல் ரீதியான அடையாளங்களைப் பார்ப்பவர்களுக்காக அவன் காட்டினான். இறைவன் சூரிய சந்திர கிரகணங்களை ரமலான் மாதத்தில் நிகழும்படி செய்து, அதை உங்களுக்கு காட்டினான். எனது சொற்பொழிவின் மூலமாக உங்களை குற்றவாளியாக ஆக்கினான். எனக்கு குர்ஆனைக் கற்றுத் தந்தான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மக்களே! நான் வல்லமையுள்ள இறைவன் புறமிருந்து உங்களிடம் வந்துள்ளேன். தன்மானமிக்க எல்லாவற்றையும் அறிந்துள்ள அந்த இறைவனுக்கு அஞ்சுபவர் உங்களில் யாராவது இருக்கின்றார்களா? அல்லது கவனமற்ற நிலையில் என்னைக் கடந்து சென்று விடுவீர்களா?

நீங்கள் உங்களது சூழ்ச்சிகளை அதன் இறுதி எல்லை வரை செய்து பார்த்தீர்கள். வேட்டைக்காரர்களைப் போல சுதந்திரமாக செயல்படுவதில் அதிகமான நேரத்தைக் கழித்து விட்டீர்கள். நீங்கள் தடுமாற்றமடைந்து புறக்கணிக்கப்படுகின்ற நிலையைத் தவிர வேறு எதையாவது பார்த்தீர்களா? நீங்கள் தேடிய அந்த விசயம் கிடைத்ததா? அது இல்லாமல் உங்களது ஈமான் வீணாகி விடக்கூடாது.

முஸ்லிம்களே! முஸ்லிம்களின் சந்ததிகளே! இறைவனுக்கு அஞ்சுங்கள். இறைவன் நான் கூறியவற்றை எவ்வாறு நிறைவேற்றியுள்ளான் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? தனது மன்னிப்பை எனக்கு அதிகமாக வழங்கினான். உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் இறைவனது அடையாளங்களின் பக்கம் முகத்தை திருப்பாமல் இருக்கின்றீர்கள். என்னை இழிவுபடுத்தும் அம்புகளை உங்களது வில்லில் நீங்கள் வைத்துள்ளீர்கள். உங்களது எண்ணம் பொய்யாகி விட்டதை நீங்கள் பார்க்கவில்லையா? உங்களது யூகத்தின் தவறு உங்களுக்கு வெளிப்பட வில்லையா? எனவே, இதற்குப் பிறகு இழிவுபடுத்துவதற்காக நிற்காதீர்கள். சோதித்துப் பார்த்த பிறகு பொய்யைப் புனைந்து கூறாதீர்கள். நீங்கள் இறையச்சமுள்ளவராக இருந்தால் நாவை அடக்கிக் கொள்ளுங்கள். வெட்கப்படுகின்ற தனது முடிவு குறித்தும் தீய மறுமை வாழ்க்கை தொடர்பாகவும் அஞ்சுகின்ற மனிதரைப் போன்று தவ்பா செய்யுங்கள். இறைவன் தவ்பா செய்பவர்களை நேசிக்கின்றான்.

அல்லாஹ் முஸ்லிம் பொதுமக்களின் உள்ளங்களை திறப்பானாக! அல்லாஹ்வின் விதியைப் புரியக்கூடியவர்களாக இந்த மக்கள் ஆகட்டும். அதன் மூலம் எந்த துன்பங்களில் துயரங்களில் இவர்கள் ஆழ்ந்துள்ளனரோ அதிலிருந்தும் அவர்கள் இரட்சிப்பைப் பெற வேண்டும். இயற்கை சீற்றங்கள் மூலம் இவர்களை குலுங்க வைத்திருப்பதைப் பார்த்து அதன் சைகைகளை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். பொய்ப்படுத்துவதிலிருந்தும் அநீதியிழைப்பதிலிருந்தும் விலக வேண்டும். நாமும் தக்வாவின்படி செயல்பட அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக! மேலும் நாம் நமது சொல்லையும் செயலையும் இறைவனது திருப்திக்கேற்ப அமைத்துக் கொள்ள முயற்சி செய்பவர்களாக ஆக வேண்டும். மேலும் உலகிற்கு அழிவைப் பற்றி எப்போதும் எச்சரிக்கை செய்து கொண்டிருப்பவர்களாக நாம் இருக்க வேண்டும்.

இப்போது நான் வஃபாத் ஆன இரு நபர்களைப் பற்றி கூறுவேன். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களுக்காக ஜனாஸா தொழுகையும் இருக்கும்.

முதலாவது நபர் மதிப்பிற்குரிய சவுத்ரி மஹ்பூஸுர் ரஹ்மான் சாஹிப் ஆவார்கள். இவர்கள் 2013 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6ம் தேதி தமது 93வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

சவுத்ரி சாஹிப் அவர்கள் எஃப்.ஏ., தேர்ச்சி பெற்ற பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறியதற்கிணங்க தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். வாழ்க்கையை அர்ப்பணித்த பிகு பைத்துல் மால் இன்ஸ்பெக்டராக காதியானில் பணியாற்றி வந்தார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத் தஆலா அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவராக இருந்த சமயத்தில் அவர்கள்

மீது மிகவும் நம்பிக்கை வைத்திருந்தனர். டில்லியில் மாநாடு நடந்த சமயத்தில் நான்கு குத்தாம்களைக் கொண்ட ஒரு குழுவில் சவுத்ரி சாஹிபும் இருந்தார்கள். இவர்கள் பெண்களது மாநாட்டுப் பந்தலில் அவர்களின் பாதுகாப்பிற்காக நின்றார்கள். இது ஜமாஅத் வரலாற்றில் ஒரு புகழ்பெற்ற சம்பவமாக இருக்கின்றது. மாநாட்டின் போது கற்கள் எறியப்பட்டன. மதிப்பிற்குரிய முஸ்தாக் பாஜ்வா சாஹிப் அவர்கள் இதனால் காயமுற்றார்கள். இவர்கள் சுவிட்சர்லாந்தில் முபல்லிக்காக இருந்துள்ளார்கள்.

பாகிஸ்தான் பிரிவினையின் போது இவர்கள் கடைசி நேரம் வரை ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் காதியானைப் பாதுகாப்பதற்காக அங்கு தங்கியிருந்தார்கள். கடைசியாக 4 நாட்களுக்கு முன்பு தான் இவர்களை மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்தார்கள். பிறகு அவர்கள் லாஹூரிலுள்ள T.I. கல்லூரியில் கணக்கர் ஆகவும், விடுதி டியூட்டராகவும் பணியாற்றி வந்தார்கள். பிறகு ரப்வாவிலுள்ள T.I. கல்லூரியில் நூலக இன்சார்ஜ் ஆக தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. பணி ஓய்விற்குப் பிறகு சிறிது காலம் வரை கிலாஃபத் நூலகத்திலும் இவர்கள் பணியாற்றி வந்தார்கள். நுஸ்ரத் ஜஹான் அகாடமியில் இவர்கள் ஆசிரியராகப் பணியாற்றினார்கள். பிறகு இந்தக் காலக்கட்டத்தில் அவர்கள் பி.ஏ. படித்து முடித்தார்கள். பிறகு இஸ்லாமியாவில் எம்.ஏ. டிகிரி பெற்றார்கள். Qualified D.P.I. ஆக இருந்தார்கள். Librarian ஆக தொண்டாற்றக்கூடிய நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

1953 ஆம் ஆண்டு நடந்த கலவரத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கொய்டாவில் தங்கியிருந்த சமயத்தில் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவர் தரப்பிலிருந்து பாதுகாப்பிற்காக அனுப்பப்பட்ட குத்தாம்களில் சவுத்ரி சாஹிபும் ஒருவர் ஆவார்கள். ரப்வாவில் ஆரம்பத்தில் குடிபெயர்ந்து சென்றவர்களில் முதலாவது அனுப்பப்பட்ட 19 பேர்கள் கொண்ட குழுவில் அவர்கள் இருந்தார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவில் விளையாட்டுச் செயலராகவும் இவர்கள் இருந்துள்ளார்கள். வாலிபால், டென்னிஸ் மற்றும் கால்பந்து ஆகியவற்றில் மிகச்சிறந்த விளையாட்டு வீரராக இவர்கள் திகழ்ந்தார்கள். முறையாக சந்தாக்களை செலுத்துபவராக இவர்கள் இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் இவர்கள் வஸிய்யத் செய்தவராவார். தமது வாழ்நாளிலேயே தமது கணக்கை சரிசெய்து விட்டார்கள். தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதின் சந்தாக்களை தமது பெற்றோர், தாத்தா, பெரியம்மாக்கள் ஆகியோரது பெயரிலும் கொடுத்து வந்தார்கள். மேலும் அடுத்த தலைமுறையிலுள்ள தமது இரண்டு பேத்திகளின் குழந்தைகளின் பெயரிலும் இந்த சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். தொழுகையைப் பேணுபவராகவும் தஹஜ்ஜுத் தொழுபவராகவும் மிகச் சிறந்த இயல்பை உடையவராகவும் இவர்கள் இருந்தார்கள். ரப்வாவில் இருந்த குறிப்பிடத்தக்க சிறந்த மக்களில் ஒருவராக இவர்கள் இருந்தார்கள். இவரைப் பற்றி யார் என்ன கூறினாலும் அவர்களுக்கு முன்னால் அதற்கான பதிலை இவர்கள் கூறுவதை நான் பார்த்ததில்லை. அமைதியாக சிரித்தவாறு ஒவ்வொரு விசயத்தையும் கேட்பார்கள். மிகவும் சிறந்த இயல்புடைய எளிமையான இயல்புடைய அமைதியாக இருக்கக்கூடிய மனிதராக இவர்கள் இருந்தார்கள். அல்லாஹ் இவர்களது பதவியை உயர்த்துவானாக! இங்குள்ள நமது அன்ஸாருல்லாஹ் தலைவராக இருக்கின்ற சவுத்ரி வஸீம் சாஹிப் அவர்கள் இவர்களது மூத்த மகனாவார்கள்.

இரண்டாவதாக நான் குறிப்பிடும் ஜனாஸா மதிப்பிற்குரிய கெய்ஸரா பேகம் சாஹிபா உடையதாகும். இவர்கள் மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா அஸ்ஹர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். இவர்கள் ஏப்ரல் மாதம் 13ம் தேதி வஃபாத் ஆனார்கள். இவர்களுக்கு வயது 70 ஆகும். இவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உம்மே நாஸிர் (ரலி) அவர்களின் மருமகள் ஆவார்கள். கேன்ஸர் பரவியதால் இவர்களது வஃபாத் நிகழ்ந்தது. மிகச் சிறந்த நல்லொழுக்கத்தின் எஜமானியாக இவர்கள் திகழ்ந்தார்கள். சிரித்த முகத்துடன் இருப்பவர்களாகவும் எல்லாருடனும் நெருங்கிப் பழகுபவர் களாகவும், கிலாஃபத்துடன் அதிகமாக தொடர்பு வைத்திருப்பவர்களாகவும் இவர்கள் இருந்தார்கள். குறிப்பாக நான் இந்த விசயத்தை அவர்களிடம் பார்த்துள்ளேன். கிலாஃபத் பதவியில் நான் அமர்ந்த பிறகு என்னுடன் இவர்களது தொடர்பு மிகவும் அதிகமாகி விட்டது. பொருள் தியாகங்களிலும் இவர்கள் பங்குபெற்று வந்தார்கள். ஏழைகள் மீது மிகுந்த அனுதாப உணர்வு கொண்டவர்களாக இவர்கள் இருந்தார்கள். இவர்களது ஏழை உறவினர்களும் எனக்கு கடிதம் எழுதியுள்ளனர் அல்லது குறைவான பொருளாதார வசதியுடைய இவர்களது உறவினர்களும் இவர்கள் எப்போதும் எங்களைக் கருத்தில் கொள்வார்கள் என்று எனக்கு எழுதியுள்ளார்கள். மேலும் எங்களுடன் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்டார்கள் என்றும் அவர்கள் எழுதியுள்ளார்கள். தேவையுடையவர்களுக்கும் உதவி பெறத் தகுதியுடையவர்களுக்கும் எவருக்கும் தெரியாமல் அவர்கள் உதவி செய்து வந்தார்கள். தனக்கு கீழ் வேலை செய்பவர்களையும் அவர்களது உறவினர்களையும் கவனத்தில் கொள்வார்கள். மாநாட்டு நாட்களில்

விருந்தினர்களுக்கு அதிகமாக விருந்தோம்பல் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் ஸயீது அஹ்மது கான் சாஹிப் அவர்கள் இவர்களின் தந்தையார் ஆவார்கள். இவரது தாத்தா மதிப்பிற்குரிய கர்னல் அவ்ஸாப் அலி கான் சாஹிப் ஆவார்கள். இவர்கள் மதிப்பிற்குரிய நவாப் முஹம்மது அலி கான் சாஹிபுடைய தாயின் சகோதரியின் மகளாவார்கள். மர்ஹூமா அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபியான அப்துல் மஜீத் கான் சாஹிப் அவர்களின் தாய்வழிப் பேத்தியாவார்கள். கபூர்தலாவைச் சேர்ந்த கான் முஹம்மது கான் சாஹிப் அவர்களின் தாய்வழி கொள்ளுப் பேத்தி ஆவார்கள். முதலில் இவர்களது தந்தையார் பைஅத் செய்தார்கள். பிறகு இவர்களது தாத்தா பைஅத் செய்தார்கள். நீங்கள் முதலில் ஏன் பைஅத் செய்தீர்கள்? என்று அவர்களது தந்தையாரிடம் கேட்டதற்கு, *நமக்கு இந்த மார்க்கம் பிடித்திருந்தது. எனவே நாம் ஈமான் கொண்டோம்* என்ற கவிதை வரியைப் பெருமையுடன் படிப்பார்கள். இவர்களது தாய்வழி கொள்ளு தாத்தாவான கான் முஹம்மது கான் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பழைய சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். 1904 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதி இவர்கள் வஃபாத் ஆனார்கள். அதற்கு அடுத்த நாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு வந்தார்கள். அப்போது இன்று அஹ்லே பைத்தைச் சேர்ந்த ஒரு நபர் வஃபாத் ஆகி விட்டார் என்று எனக்கு இல்ஹாம் வந்துள்ளது என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஹுஸூர் அவர்களது அஹ்லே பைத்தைச் சேர்ந்த அனைவருமே நலமாக உள்ளனர் என்று கூறினார்கள். பிறகு இந்த இல்ஹாம் யாரைப் பற்றியது? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கபூர்தலாவைச் சேர்ந்த கான் முஹம்மது கான் சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். எனக்கு அவர்களைப் பற்றியே இந்த இல்ஹாம் இறங்கியுள்ளது என்று கூறினார்கள். அல்லாஹ் இல்ஹாமில் அவர்கள் அஹ்லே பைத் அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தவராவார் என்று கூறி விட்டான்.

பிறகு இவர்கள் தொடர்பாக இவர்களது பிள்ளைகளுடன் மென்மையான முறையில் நடந்து கொள்ளப்படும் என்ற இல்ஹாமும் இருந்தது. தற்செயலாக நான் ஸ்பெயினில் வைத்து வேறொரு நோக்கத்திற்காக டஸ்கிராவைப் பார்த்துக் கொண்டிருந்த போது இந்த இல்ஹாம்களும் எனது பார்வையில் பட்டன. இந்த இரண்டு இல்ஹாம்களும் அதாவது இவர்களது வஃபாத் தொடர்பான இல்ஹாமும், இவர்களது பிள்ளைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளப்படும் என்ற இல்ஹாமும் அல்லாஹ்வின் அருளால் மிகுந்த மகிமையுடன் நிறைவேறியது. கான் முஹம்மது கான் சாஹிப் அவர்களின் மகள்தான் மதிப்பிற்குரிய கைஸரா பேகம் சாஹிபா உடைய பாட்டனார் ஆவார்கள். கபூர்தலா பிரதேசத்தில் இவர்கள் வேலைக்காக விண்ணப்பித்திருந்தார்கள். கடுமையான போட்டி இருந்தது. பகி கானாவுக்கு ஆபீஸராக நியமிக்கப்பட்டார்கள். பிறகு அந்த பணியிலிருந்து முன்னேறி முன்னேறி மாவட்ட மாஜிஸ்டிரேட் என்ற பதவியை வகித்தவாறு அவர்கள் பணி ஓய்வு பெற்றார்கள். அல்லாஹ் இவர்களை அஹ்லே பைத்தைச் சார்ந்த ஒருவராக ஆக்கினான். பிறகு இவர்களது பேத்தி ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் மருமகளாகவும் ஆனார்கள். அல்லாஹ் இவரை மன்னிப்பானாக! இவர்களது பதவியை உயர்த்துவானாக! இவர்களது பிள்ளைகளுக்கும் நன்மைகளை செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஜமாஅத்துடனும் கிலாஃபத்துடனும் தொடர்புள்ளவர்களாக இவர்களை ஆக்குவானாக! இவர்களது கணவரான மதிப்பிற்குரிய மிர்ஸா அஸ்ஹர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கும் இந்த துக்கத்தை சகித்துக் கொள்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக! அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at BAIT-UL-FUTUH MOSQUE, London.

on **19.04.2013**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456